# நடப்பு நிகழ்வுகள்- ஆகஸ்ட் 29 - 2017

- தேசிய விளையாட்டு தினம் (National Sports Day) ஆகஸ்ட் - 29. இந்தியாவின் தேசிய விளையாட்டான ஹாக்கியில் 1928, 1932, 1936 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்ல காரமாயிருந்த தயான் சந்த் நினைவாக அவரது பிறந்த நாளில் விளையாட்டு தினம் கடைபிடிக்கப்படுகிறது.

- சர்வதேச அணுச்சோதனை எதிர்ப்பு நாள் (International Day against Nuclear Tests) அகஸ்ட் - 29

- இந்திய உச்ச நீதிமன்றத்தின் **45-வது தலைமை நீதிபதியாக தீபக் மிஸ்ரா ஆகஸ்ட் 28 அன்று பதவியேற்றார்.** இவருக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பதவி பிரமாணம் செய்துவைத்தார். இவர் 2018 அக்டோபர் 2-ம் தேதி வரை 13 மாதங்கள் பதவி வகிப்பார்.

- 2-வது இந்திய பெருங்கடல் மாநாடு ஆகஸ்ட் 31 அன்று இலங்கையின் கொழும்புவில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டை டெல்லியின் இந்தியா ஃபவுண்டேஷன், RSIS (சிங்கப்பூர்) மற்றும் NIFS (கொழும்பு) ஆகியவை இணைந்து நடத்துகிறது. இம்மாநாட்டின் மையக்கருத்து “Peace, Progress and Prosperity”.

- 9-வது பிரிக்ஸ் (BRICS) உச்சிமாநாடு சீனாவின் ஃபியூஜினான் மாகாணத்திலுள்ள சியாமெனில் செப்டம்பர் 3-5 வரை நடைபெறுகிறது. இதில் இந்திய பரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்கிறார்.

- உலகின் முதல் வைரப்பரிமாற்றத்தினை Indian Commodity Exchange (ICEX) தொடங்கியுள்ளது. முதலில் 1 காரட் அளவுக்கான கட்டாய விநியோகத்துடன் இந்த ஒப்பந்தங்கள் செயல்படுத்தப்படும். விற்பனையாளர்கள் தங்களின் வைரங்களை பல்வேறுபட்ட வைரம் வாங்குவோருக்கு விற்க உதவும்.

- பிரபல கால்பந்தாளரும், ஒலிம்பிக் வீரருமான அகமது கான் (வயது 90) ஆகஸ்ட் 27 அன்று பெங்களூரில் காலமானார்.

OXFORD IAS ACADEMY

- புதுடில்லியில் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் மீதான பாதுகாப்பு கணக்குத் துறையின் முதல் ஒத்துழைப்பு மபநாடு ஆகஸ்ட் 28-ல் நடைபெற்றது. ஓய்வூதியதாரர்களிடமிருந்து கருத்துக்களை பெற்றுக்கொள்வதுடன் அதனைக் கொண்டு அமைப்புகள் மற்றும் நடைமுறைகளை மேற்கொள்வதாகும்.

- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வினியோக அமைப்பினை மேம்படுத்துவதற்காக ஜெர்மனி நாட்டுடன் இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது. இந்தோ – ஜெர்மன் ஆற்றல் திட்டமான "Green Energy Corridors"–ன் கீழ் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மீதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

- மும்பை பங்குச்சந்தையின் புதிய தலைவராக ஆஷிஷ் சௌகான் நியமிக்கப்பட்டுள்ளார். நவம்பர் 2, 2017 முதல் நவம்பர் 1, 2022 வரை 5 ஆண்டுகளுக்கு பாம்பே பங்குச்சந்தையின் புதிய மேலாண்மை இயக்குனர் மற்றும் முதன்மை நிர்வாக அலுவலராக மீண்டும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

- அழிவின் விளிம்பிள் இருக்கும் பனிச்சிறுத்தைகளையும் அதன் வாழ்விடங்களை பாதுகாப்பதற்காகவும் உலகின் முதல் காலநிலை-ஸ்மார்ட் பனிச்சிறுத்தைத் திட்டத்தை நேபாள அரசு தொடங்கியுள்ளது.

- வரும் 2024 முதல் நாடு முழுவதும் லோக்சபா, சட்டசபை தேர்தல்களை ஒரே சமயத்தில் நடத்த "நிதி ஆயோக்" அமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளது.

- இந்தியா, சீனா, பூட்டான் எல்லையில் உள்ள டோக்லாம் பகுதியில் சாலை அமைக்க சீனா முயன்றது. இதற்கு இந்திய படைகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து அந்த பணிகளை நிறுத்தின. அதை தொடர்ந்து சிக்கிம் எல்லையில் பதற்றமான சூழ்நிலை உருவானது. இரு நாட்டு படைகளும் அங்கு குவிக்கப்பட்டன.
- ஜுன் 16-ம் தேதி தொடங்கிய பிரச்சனைக்கு இரு நாடுகளுக்கிடையே 28-8-17 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இரு நாட்டு படைகளும் டோக்லாம் பகுதியிலிருந்து திரும்பிபெற முடிவுசெய்யப்பட்டுள்ளது.